தனி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார் அவர் பொதுமக்கள் எடுத்துரைக்கும் சுற்றுச்சூழல் சம்பந்தமான கருத்துக்களை பதிவு செய்வது கூட்டத்தின் நோக்கம் என்று கூறினார். பின்னர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் திட்ட ஆலோசகரால் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிகள் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

அதனை தொடர்ந்து சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் திரு.ஷேக் நவாஸ் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்க காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனவும் அவை வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் கூறினார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை பதிவு செய்தனர் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

1. **திரு.K. சிவப்பிரகாஷ் பொட்டையாண்டிபிரம்பு :**

என் பெயர் K. சிவப்பிரகாஷ் பொட்டையாண்டிபிரம்பு கிராமம். எங்கள் ஊர் கிணத்துக்கடவு மேற்கு பகுதி பார்த்தால் வானம் பார்த்த பூமி. மழையை நம்பித்தான் விவசாயம் நடக்கிறது. இருப்பினும் நாளுக்கு நாள் குவாரிகள் அதிகரித்துக் கொண்டு வருவதினால் இப்போது அந்தப் பகுதியில் ஒரு கிணற்றில் கூட தண்ணீர் கிடையாது. இப்போது மீண்டும் குவாரிகளுக்கு அனுமதி கொடுத்ததால் மீதம் இருக்கின்ற கிணறுகளில் தண்ணீர் வற்றும் சூழ்நிலை வந்துவிட்டது. அதனால் கிராமம் சார்பாக குவாரிக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறோம்..

2. **திரு. பிரேம் குமார் சொக்கனூர்** :

வணக்கம், நான் பெரிதாக ஒன்றுமில்லாமல் இரண்டே கருத்தை மட்டும் சொல்லப் போகிறேன். என்னவென்றால், முதலாவதாக நிலத்தடி நீர் மட்டம் மழைக்காலத்தில் 3 மீட்டரும் கோடைகாலத்தில் 11 மீட்டரும் இருக்கிறது. குவாரி ஆழம் 45 மீட்டர், 50 மீட்டர் கொடுக்கும் போது சுற்றி உள்ள கிணற்றில் தண்ணீர் வற்றிவிடும். அடுத்த தலைமுறை கண்டிப்பாக வேண்டும். இரண்டாவதாக சொக்கனூர் கிராமத்தை பொறுத்தவரை முழுவதும் விவசாய நிலங்கள்தான். கடந்த 10ஆண்டுகளாகத்தான் குவாரிகள் வந்து கொண்டிருக்கிறது. விவசாய நிலங்களை அழித்து குவாரி பண்ணும் போது நீண்ட நாளாக விவசாயம் செய்த நிலங்கள் குறுகிய காலத்தில் வீணாகிப் போய்விடுகிறது. இந்த இரண்டு கருத்துக்கள் தான். ஆட்சேபனை தெரிவிக்கிறேன். இனிமேல் சொக்கனூர் கிராமத்தில் குவாரிகள் வேண்டாம். அப்படியே அனுமதி கொடுப்பதாக இருந்தால் திறந்த வெளி கிணறுகளின் ஆழம்

10மீட்டருக்கு குறைவாக உடைப்பதாக இருந்தால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

நன்றி.

3. **திரு. தினேஷ் குமார் சொக்கனூர்** :

வணக்கம் என் பெயர் தினேஷ் குமார். சொக்கனூர் கிராமத்தில் இருந்து வருகிறேன். நான் லாரி வைத்து தொழில் நடத்திக் கொண்டு இருக்கிறேன். என்னை நம்பி 6 டிரைவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் குடும்பம், குழந்தைகள், வாழ்வாதாரம் இதை நம்பித்தான் இருக்கிறது. சுற்றுசூழலை பாதிக்காதவாறு எப்படி குவாரி பண்ணுவது என்று சார் சொன்னார்கள். அதை பின்பற்றினாலே இந்த பிரச்சனைகளை தவிர்க்கலாம். இதை நம்பி என்னுடன் 10, 15 குடும்பங்கள் வாழ்வாதாரமாக இருக்கிறது.

4. **திரு. சாந்தலிங்கம் வீரப்பகவுண்டனூர்** :

என் பெயர் சாந்தலிங்கம் வீரப்பகவுண்டனூர். இந்த குவாரி இருக்கிற ஊர்தான். இந்த குவாரி பார்த்தால் ஒரு ஒதுக்குப்புறமாகத்தான் இருக்கிறது. விவசாயம் பண்ணுவதுபோல் இந்த இடத்தில் இல்லை.தென்னை மரமோ வேறு செடிகளோ வைக்க முடியாத அளவிற்கு பாறையாகத்தான் இருக்கிறது. இதைக் கொண்டு இந்த 10 ஏக்கரை ஒன்றும் செய்ய முடியாது. வேறு வழி இல்லை குவாரி உடைத்துதான் ஆக வேண்டும். எங்கள் ஊரிலிருந்து 25 பேர் சுமார் 30 கிலோமீட்டர் தாண்டி இதே கல் வேலைக்கு போய்க் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு இது மிகவும் உதவியாக இருக்கும். இங்கிருந்தால் அவர்களுக்கு இங்கேயே வேலை கிடைக்கும் அவர்களுக்கும் ஒரு வாழ்வாதாரமாக இருக்கும். நன்றி.

5. **திரு. மணிகண்டன் வீரப்பகவுண்டனூர்** :

இதை நம்பி 10, 15 குடும்பங்கள் இருக்கிறது. நான் கல்குவாரியில்தான் வேலை செய்கிறேன்.

6. **திரு. கே.பாலன், செங்குட்டுபாளையம்** :

நான் செங்குட்டுபாளையம். எங்கள் ஊரே கல்குவாரியில்தான் வேலை செய்கிறது. தொழிலே கல் குவாரிதான், கம்ப்ரெஸ்ஸர், கல் உடைப்பது, போன்ற தொழில் தான். வெளியூர் சென்றுதான் பிழைக்கிறோம். உள்ளூரில் இந்த குவாரி வந்தால் எங்களுக்கு வசதியாக இருக்கும். மொத்தம் 500 பேர் இந்த வேலை செய்கிறோம். நன்றி.

7. **திரு.சிவமணி, குமிட்டிபதி :**

வணக்கம். என் பெயர் சிவமணி. இந்த கல்குவாரி இருப்பதினால் நிறைய பேருக்கு வேலை கிடைக்கிறது. அங்கு நாங்கள் வேலை செய்துதான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதனால் எங்களுக்கு வசதியாக இருக்கும்.

8. **திரு.S . நந்தகுமார் நாச்சிபாளையம்** :

இங்கு கல்குவாரி அமைவதினால் பஞ்சாயத்திற்கு தேவையான எல்லாமே கிடைக்கிறது. அதுமட்டுமில்லாமல் விதிமீறல் இல்லாமல் எல்லாமே முறைப்படித்தான் போய்க்கொண்டிருக்கிறது. விதிகளை மீறி எதுவுமே நடப்பதில்லை. அதனால் எந்த ஒரு பாதிப்பும் வராது என்பது என்னுடைய கருத்து.

9. **திரு. கார்த்திக், சொக்கனூர்** :

என் பெயர் கார்த்திக் சொக்கனூர். நான் இந்த கல்குவாரியை நம்பித்தான் பொக்லின் வைத்து 30, 40 பேருக்கு வேலை கொடுத்துக் கொண்டு இருக்கிறேன். எங்கள் வாழ்வாதாரம் இதை நம்பித்தான் இருக்கிறது. இந்த கல்குவாரியினால் 40, 45 குடும்பங்கள் என்னால் வாழும். இது வருவது நல்ல விஷயம் தான் என்பது என்னுடைய கருத்து.

10. **திரு. சக்திவேல் குட்டிகவுண்டன்பட்டி** :

காலை வணக்கம் இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்க்கு வந்துள்ள அதிகாரிகளுக்கு என் மனமார்ந்த நன்றி. நான் விவசாய தொழில் செய்கிறேன். கல் குவாரியினால் இந்த கிராமத்தில் மட்டுமல்லாமல் இந்த ஒன்றியத்துக்கு உட்பட்ட ஏராளமான விளிம்பு நிலையிலுள்ள மக்களின் வாழ்வாதாரமும், முன்னேற்றம் உறுதிப்படுத்தப் படும். இதை நம்பி நிறைய லாரி தொழில்கள், லாரி தொழிலை நம்பி இருக்கிற கம்ப்ரஸ்ஸர் வைத்திருப்போர் உள்ளனர். மற்றும் விவசாயம் பண்ண முடியாத ஒரு பாறையாகத்தான் இந்த நிலம் இருக்கிறது. கல் தொழில் தவிர வேறொன்றும் செய்ய முடியாத சூழ்நிலைதான் அங்கே இருக்கிறது. இது காலம்காலமாக எல்லோருக்கும் தெரிந்த ஒரு விஷயம்தான். அதனால் அதிகாரிகள் இதனை பரிசீலனை செய்து, அனுமதி கொடுத்தால் ஏராளமான குடும்பங்கள் வாழ்வாதரம் உயரும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

11. **திரு. செல்வராஜ், மயிலேறிப்பாளையம் :**

என் பெயர் செல்வராஜ். நான் மயிலேறிபாளையத்திலிருந்து வருகிறேன். எங்கள் தோட்டத்திற்கு பக்கத்தில் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் 4 கிரஷர்கள் இருக்கிறது. அந்த 4 கிரஷரிலிருந்தும் புகை அதிகமாக வருகிறது. இதனால் விவசாயம் மிகவும் பாதிக்கிறது. கிணற்றில் அரை மணி நேரம், ஒருமணி நேரம் தான் தண்ணீர் வருகிறது. தூசி பிரச்சினையினால் என் அப்பாவிற்கு மூச்சு திணறலாக இருக்கிறது. அங்கே விவசாயம்

மிகவும் பாதிக்கிறது. எங்கள் கிணற்றில் தண்ணீர் வற்றாது. இந்த குவாரி வந்த பிறகு கிணற்றிலும் சுத்தமாக தண்ணீர் இல்லை. ஒருமணி நேரம் தான் தண்ணீர் வருகிறது. விவசாயம் மிகவும் பாதிக்கிறது. தூசி பிரச்சினை, புகை அதிகமாக வருகிறது. பஞ்சாயத்து சாலைகளில்தான் லாரிகள் அதிகமாக ஓட்டுகிறார்கள். லாரிகள் போகும் பாதையில் 15 நாட்களாக என்னுடைய டாட்டா ACE ஐ நிறுத்தி வைத்திருக்கிறேன். 15 நாட்களாக யாரும் வரவில்லை. இந்த கூட்டத்திற்கு நான் வருகிறேன் என்று சொன்னதும் நேற்று வந்து புகை வராமல் பார்த்துக் கொள்கிறோம், சாலைகளுக்கு கான்கிரீட் போட்டு தருகிறோம், கிரஷரில் மேற்கூரை அமைத்து தூசி வராமல் தண்ணீர் தெளித்து உங்களுக்கு பாதுகாப்பாக செய்து தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். எங்களுக்கு குவாரிவேண்டாம். குடிப்பதற்கே தண்ணீர் இல்லாமல் ஆகிவிடும். இதே நிலை இன்னும் ஒருவருடம் நீடித்தால் அங்கே வாழவே முடியாது. அந்த அளவிற்கு விவசாய நிலம் பாதித்து விட்டது. சிறிய தக்காளி கூட வைக்க முடியாது. 30 மாடுகள் நான் வைத்து இருந்தேன். 20 ஆண்டுகளாக பால் சொசைட்டி வைத்து இருக்கிறேன். 30 மாடுகள் வைத்து இருந்தேன். இன்றைக்கு 4 மாடுகள் வைத்து இருக்கிறேன். அங்கே வாழவே முடியாது. அந்த அளவிற்கு விவசாய நிலம் பாதித்து உள்ளது. தேங்காய் 3000காய் , 4000 காய் வந்து கொண்டிருந்தது. இன்று பாளை வெடிக்கும் போதே டஸ்ட் போய் படிந்து மகரந்த சேர்க்கையை நடப்பதில்லை. அப்படி இருக்கும் போது 200 காய் கூட வருவதில்லை. 45 நாட்களுக்கு ஒருமுறை தான் தேங்காய் வெட்டுகிறார்கள். அதற்க்கு 200 காய், 300காய் கூட வருவதில்லை. 4 வண்டி தேங்காய் வந்த் தோப்பில் இன்று 200காய் கூட வருவதில்லை. ரொம்ப சிரமமாக இருக்கிறது. அங்கு நாங்கள் உயிர் வாழவே முடியாத பிரச்சனை இருக்கிறது. நீங்கள்தான் பார்த்துக் கொள்ளவேண்டும்.

12. **திரு. ராயப்பன் சொக்கனூர்** :

என்னுடைய பெயர் ராயப்பன். சொக்கனூர். என்னுடைய தோட்டத்திற்கு 20 மீட்டர் தூரத்தில்தான் குவாரி இருக்கிறது. நான் புகார் தெரிவித்தும் கூட பக்கத்து வீட்டில் தலை மேல் கல் வந்து விழுந்தது. 4பேர், 5பேர் வண்டி வைத்து ஓட்டுபவருக்கே பாதிக்கிறது என்றால், ஒரு விவசாயி இந்த நாட்டையே காப்பாற்றுபவருக்கு ஒரு உரிமை கிடையாதா? 4பேர், 5பேர் வாழ்வாதாரத்தை பற்றி சொல்கிறார்கள், ஒரு நாட்டையே காப்பாற்றும் விவசாயி பற்றி எத்தனை பேர் சொல்லவேண்டும். தயவு கூர்ந்து கிணத்துக்கடவிலிருந்து மேற்கு பகுதியில் இனிமேல் குவாரிகளுக்கு அனுமதி கொடுக்காத அளவிற்கு அதிகாரிகள் தயவு செய்ய வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்தை காப்பாற்ற வேண்டும், நன்றி.

13. **திருமதி. தெய்வானை மாரிசெட்டிபதி** :

எல்லோருக்கும் வணக்கம். நான் தெய்வானை மாரிசெட்டிபதியிலிருந்து வருகிறேன். இங்கு பொது மக்களுக்காக பேச வந்திருக்கிறேன். எங்கள் ஊரில் என் அண்ணன், தம்பிகள், அப்பா, அம்மா, சொந்தக்காரர்கள், எங்களை சுற்றி உள்ள கிராமங்களில் எல்லோருமே கல் குவாரிக்கு தான் வேலைக்கு போய்க் கொண்டு இருக்கிறார்கள். அந்த வாழ்வாதாரத்தை நம்பித்தான் இருக்கிறார்கள். பாறையை உடைத்து நல்லது பண்ணுவதாக இருக்கிறார்கள் என்றால் எங்கள் மக்களுக்கு எந்த ஒரு பிரச்சனையும் கிடையாது. நீங்கள் தாராளமாக அனுமதி கொடுக்கலாம். ஏனென்றால் பாறையை உடைக்காமல் இருந்தாலும் கூட அதில் விவசாயமும் பண்ண முடியாது. மக்களுக்கு 4 பேருக்கு நல்லது நடக்குமென்றால் அதை உடைப்பதினால் எங்களுக்கு எந்த பாதிப்பும் கிடையாது. நன்றி.

14. **<u>திரு. R . சிவானந்தம் முத்தூர்</u>** :

என் பெயர் R . சிவானந்தம் முத்தூர், கிணத்துக்கடவு தாலுகா. SRS ப்ளூ மெட்டல் என்ற பெயரில் கிரஸெர் வைத்திருக்கிறோம். கிட்டத்தட்ட 70 பேர், 80 பேர் வேலை செய்கிறார்கள். இப்பொது அரசு அனுமதியெல்லாம் இன்னும் ஒரு வருடத்திற்குள் முடிய போகிறது. அதை நம்பி கல் வேலைக்குப் போகிறவர்கள் இங்கே நிறைய பேர் இருக்கிறார்கள். இப்போது விதிமுறைகளை பின்பற்றியே எல்லாம் எந்த விதமான இடையூறும் இல்லாமல் செய்து கொண்டிருக்கிறோம். முக்கியமாக முத்தூரை பொறுத்த வரைக்கும் குடிசைத்தொழில் செய்பவர்கள் 200,300 பேர் வேலை செய்கிறார்கள். எனவே கல்குவாரி என்பது மிக மிக அவசியம். உள்கட்டமைப்பை மேம்படுத்த M சேண்டு மிகவும் தேவைப்படுகிறது. அதற்கான மூலப் பொருட்கள் பாறையிலிருந்தே கிடைக்கிறது. அப்படி இருக்கும் போது இங்குமட்டுமில்லாமல் எங்கெல்லாம் குவாரி இருக்கிறதோ அரசு நடவடிக்கை எடுத்து முன்பிருந்ததை விட இப்போது எல்லோரும் மாறிக் கொண்டு வருகிறோம். இதை சார்ந்து இருக்கும் மக்கள் நிறையபேர் இருக்கிறார்கள். கருத்து கேட்பு கூட்டத்திற்கு பிறகு விரைவாக அதுமட்டுமன்றி அனுமதி கால அளவையும் நீட்டித்துக் கொடுத்தால் விதிகளின் படி அனைத்தையும் செய்து கொள்வோம். இதை நம்பி இருப்பவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். நிறைய பேர் பாதிப்பு இருப்பதாக சொல்கிறார்கள். பாதிப்பு இல்லாமல் செய்ய நிறைய நவீன முறைகள் வந்துவிட்டது. நாங்களும் இதை செய்கிறோம், சுற்றி கம்பிவேலி போட்டிருக்கிறோம், தண்ணீர் விடுகிறோம். எனவே அரசு சொல்லும்படித்தான் இனிமேல் எல்லாமே செய்வோம். செய்யப் போகிறோம் . அதனால் கண்டிப்பாக குவாரி செய்ய அனுமதி கொடுத்தால் அனைவருக்கும் உதவியாக இருக்கும். நன்றி.

15. **திரு. லோகநாதன் வீரப்பகவுண்டனூர்** :

வணக்கம் என்பெயர் லோகநாதன், நான் வீரப்பகவுண்டனூர். இந்த இடம் சுற்றிலும் 10 ஏக்கர் முழுவதும் பாறைதான், வேறு எதற்கும் உபயோகப்படாது. முழுவதும் பாறையாக இருப்பதினால் அனுமதி கொடுக்கலாம்.

**16. திரு. முகிலன், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு** :

கோவை மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் கோவை தெற்கும் இணைந்து நடத்துகின்ற சொக்கனூர் கிராமத்தில் புதிய மகாலிங்கம் கல்குவாரி 7.5 ஏக்கர் கல்குவாரி கருத்து கேட்பு கூட்டத்தினுடைய தலைவர் பெருமதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், இதை முன்னிலை வகித்து நடத்திக் கொண்டிருக்கும் மாவட்ட சுற்று சூழல் பொறியாளர் அவர்களுக்கும் இங்கே பங்கெடுத்துக் கொண்டுள்ள பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகளுக்கும், இன்றைய வாழ்க்கை மட்டுமல்ல இன்று கால நிலை மாற்றம் உட்பட பல்வேறு சிக்கலில் தமிழக அரசே பல்வேறு உயர்மட்ட குழுக்கள் அமைத்து சூழலியல் பிரச்சனை முதன்மை பிரச்சனை என்று முதல்வரே சொல்லி இயங்கி கொண்டிருக்கின்ற காலத்தில் இந்த பகுதி எப்படி வாழவேண்டும், இந்த பகுதி எப்படி பாதிப்புக்கு உலாக்க கூடாது என்று அக்கறையோடு வருகை தந்து பதிவு செய்துள்ள உள்ளூர் பொது மக்கள், விவசாயிகள், சமூக செயல்பாட்டாளர்கள், மற்றும் இந்த குவாரிக்கு அனுமதி கேட்டுள்ள கல் குவாரி உரிமையாளர்கள், கல் குவாரி உரிமையாளர்களால் அழைத்து வரப்பட்டவர்கள் அனைவருக்கும் எங்களுடைய வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய பெயர் முகிலன். தமிழ்நாடு சுற்றுசூழல் இயக்கத்தினுடைய ஒருங்கிணைப்பாளர். உயர் நீதி மன்றமும், உச்ச நீதி மன்றமும் நியமித்த சகாயம் ஆய்வுக்கு குழுவில் ஓராண்டுகாலம் உடனிருந்து கிராணைட்

முறைகேடு தொடர்பான ஆய்வு பணிகளில் செயல்பட்டவன். அதுமட்டுமல்லாமல் தற்போது மதுரை மாவட்டத்தில் 5000 ஏக்கர் டங்ஸ்டன் கனிம சுரங்கம் என்று ஒன்றிய அரசு ஏலம் விட்ட பொழுது அதற்கான அனைத்து ஆவணங்களையும் கொடுத்து தமிழ்நாடு சட்ட சபையில் அந்த திட்டத்தை ரத்து செய்கிறோம் என தமிழக அரசு எனது பெயரை சொல்லியே இன்றைய அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த மண் வாழவேண்டும் எதிர்காலத்தில்தலைமுறை நன்றாக வாழவேண்டுமென்ற அக்கறையோடு மட்டுமே எனது கருத்தை பதிவு செய்கிறேன். இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தினுடைய முதன்மையான விஷயம். இங்கு எல்லோரும் பாறை, பாறை என்று சொல்கிறீர்கள் ஆனால் அரசு பதிவேடுகளில் அது முழுக்க முழுக்க நஞ்சை நிலம் அதை புஞ்சை நிலமாக வகை மாற்றம் செய்து உள்ளார்கள். நஞ்சை நிலத்தை புஞ்சை நிலமாக மாற்றி இந்த குவாரிக்கு அனுமதி கேட்டு இருக்கிறார்கள். சுரங்கத்திட்ட அறிக்கையில் நாம் பார்த்தாலே குவாரியை சுற்றி பெரிய ஓடைகள் உள்ளது. 30அடி , 40 அடி அகலமுள்ள பெரிய ஓடைகள் சுற்றிலும் இருக்கிறது. அதுமட்டுமல்ல கூகுள் படங்களில் எடுத்தால் அதில் எதுவுமே இல்லை முழுக்க வறட்சி என்றார்கள். குவாரியை சுற்றி எவ்வளவு தென்னை மரங்கள் இருக்கிறது. இவ்வளவு வளமான பகுதி. பொதுவாக இந்த இடத்தை பொறுத்தவரை எனக்கு முன்னாள் பேசிய மரியாதைக்குரிய சிவப்பிரகாசம் தெரிவித்தார்கள். இது வானம் பார்த்த பூமி. இதில் எங்களுக்கு இயல்பாக பெய்யும் மழையும், ஓடையும் தான் வாழ்வாதாரம்.இந்த பகுதி பலாக்காடு கணவாயை சேர்ந்த பகுதி. கிட்டத்தட்ட தமிழ்நாட்டினுடைய சராசரி மழையளவு 900மி.மீ என்று இருக்கும்போது இந்தப்பகுதி மட்டும் 2000 மிமீ கொண்டபகுதியாக இருந்தது. அது குவாரிக அமைக்கப் படுவதற்கு முன்பு. சுற்று இருக்கும் ஓடைகளில் கூட 10மாதம் தண்ணீர் போய்க் கொண்டு இருந்தது. அப்படியான பகுதி இது. இந்தப் பகுதிகளில் குவாரிகள் அமைத்த பிறகு உருவாக்கவே முடியாத பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. சிறுகனிம சலுகை

விதிகளில் பிரிவு எண் 36/1 ல் குவாரியை சுற்றி 300 மீ தூரத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் இருக்கக்கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட வீடுகளை பொறுத்த வரை எல்லா வீடுகளுகளும் வீடுகளா என்றால் இல்லை. 1985 ம் ஆண்டுக்கு பிறகு பஞ்சாயத்து அப்ரூவல் அல்லது 2005க்கு பிறகு DTCP அப்ரூவல் வாங்கி இருக்க வேண்டும். இது இல்லாமல் அங்கீகரிக்கப் பட்ட வீடுகள் என்பது கிராம வரைபடம், புல வரைபடம், அ பதிவேடு என்ற வருவாய் ரெகார்டுகளில் சுட்டிகளாக இருந்தாலே அது அங்கீகரிக்கப்பட்ட வீடு. இப்போது நிறைய இடங்களில் குவாரி உரிமையாளர்கள் நிலங்களை வாங்கி கட்டிடங்களை இடித்து விடுகிறார்கள். UDR மற்றும் நத்தம் நில அளவை புல பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்ட வீடு சிதிலமடைந்திருந்தாலோ, இடிந்திருந்தாலோ அது ஆரம்ப நிலையில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்ததோ அவ்வாறே பதியப்பட வேண்டும் என்றும் கல்குவாரி தொடர்பான தூர அளவீடு வரைபட அறிக்கையில் அங்கீகரிக்கப்பட வீடு, வீட்டுமனை, ஓடை கிராமவரைபடம், புல வரைபடம் மற்றும் அ பதிவேடு ஆகியவற்றை சரிபார்த்தே வழங்க வேண்டும் என்ற விபரமும் இதன் மூலம் அனைத்து நில அளவை பணியாளர்களுக்கும் தெரிவிக்கப் படுகிறது என்று சொல்லி இருக்கிறார்கள். குவாரியினுடைய வடபுறத்தில் புல எண் 871ல் 100 மீட்டருக்கு 2 வீடுகள் இருக்கிறது. அதே போல் தென்கிழக்கு பகுதியில் புல என் 827ல் 1 வீடு இருக்கிறது. குவாரியினுடைய தென் மேற்கு பகுதி 860ல் 295மீட்டரில் 2 வீடுகள் இருக்கிறது. இவை எல்லாமே அரசின் ஆவணம். சுற்றி 5 வீடுகள் இருக்கிறது இதை குறிப்பாணையில் 5 வீடுகளும் தோட்டத்து சாலை என்று சொல்லி இருக்கிறார்கள். இதை சொன்ன அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தகவல்களை தரவேண்டாம் என்று அதிகாரிகளை கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் ரகுபதியினுடைய ஊர் லட்சுமிபுரத்தில் 2 குவாரி மீது வழக்கு போட்டு நிறுத்திவிட்டார்கள். அதனால் பதிவேடுகளில் இருந்தாலே அது வீடுதான். யார்

கொடுத்தாலும் அது செல்லாது. குறிப்பாணையை பொறுத்தவரை AD மைன்ஸ்தான் கொடுத்திருப்பார் அது அரசை ஏமாற்றுகின்ற வேலை என்று நேரடியாகவே நான் சொல்கிறேன். குவாரியை சுற்றி தற்காலிக வீடுகள் நிறைய இருக்கிறது. 300 மீட்டருக்குள் தற்காலிக வீடுகள் இருந்தாலே அனுமதி கொடுக்கக் கூடாது என்று இதே மாவட்டத்தில் AD மைன்ஸ் சசிகுமார் அவர்கள் பல குவாரிகளை கொடுத்துள்ளார்கள். ஏனென்றால் 2024 மே 1 அன்று ஆதியூரில் ஒரு குவாரியில் வெடி விபத்து நடந்தது. அதில் 3 கிமீ பாதிப்பாகி 6 பேர் இறந்து போனார்கள். எனவேதான் 300 மீட்டருக்குள் யாருமே குடி இருக்கக் கூடாது என்று சசிகுமார் அவர்கள் குவாரிகளை குறிப்பாணையில் கொடுத்து இருக்கிறார். எனவே இந்த குவாரியை சுற்றி எண்ணற்ற வீடுகள் இருக்கிறது. கூகுள் படங்களில் 10 வீடுகள் காட்டப்பட்டிருக்கிறது. எனவே மகாலிங்கம் குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்கமுடியாது. குவாரியை ஒட்டியே ஓடை போகிறது. குவாரியை ஒட்டியே வட புற பகுதியில் மிகப் பெரிய ஓடை போகிறது. ஓடை இருந்தால் 50மீட்டர் இடைவெளி என்று சிறு கனிம சலுகை விதிகள் சொல்கிறது. இவர்கள் அறிக்கையில் குவாரிக்கு தென் பகுதியில் ஒருகுட்டை இருக்கிறது. குட்டைக்கு 50 மீட்டர் இடைவெளி விடுகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். மதுரை நீதிமன்றம் இந்த ஆண்டில் மட்டும் 5 குவாரிகளுக்கு நீர் நிலைகளுக்காக அனுமதியை ரத்து செய்திருக்கிறார்கள். ஓடை என்பது உருவாக்க முடியாது இயல்பாக உருவாகி வருவது. வருவாய் நிலை ஆணை எண் 26 பிரிவு 15ன் படி நிலவில் பாதை, நிலவியல் ஓடை பட்டா நிலத்தில் இருப்பினும் அவை அரசுக்கு சொந்தமாகும். அதில் ஆக்கிரமிப்பு இருந்தால் அதை அகற்ற வட்டாட்சியருக்கு அதிகாரம் உண்டு. என்று சொல்லி இருக்கிறார்கள். ஓடையை மறைத்து இந்த திட்டத்திற்கு அனுமதி கேட்டு இருக்கிறார்கள். குவாரிக்கு கிழபுரம் உள்ள வண்டி ப்பாதைக்கு 10 மீட்டர் இடைவெளி விடுவார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அது அரசால் போடப்பட்ட

45

பஞ்சாயத்து சாலை. பொது சாலைக்கு 50மீட்டர் இடைவெளி விடவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஏனென்றால் வெடி வைத்தால் பாதிக்கும் என்பதற்காகத்தான். பொது சாலைக்கு 50 மீட்டர் இடைவெளி இல்லாததால் சட்டப்படி அந்த குவாரிக்கு அனுமதி கொடுக்க முடியாது. PPT ல் குவாரிக்கு வடபுறமும், கிழபுரமும் EB லைன் போகிறது. அதற்க்கு 50 மீட்டர் இடைவெளி விடவேண்டும் என்பது அரசின் விதி. நீர் நிலைகளைப்பொறுத்த வரை ஆறு, ஓடைக்கு 50 மீட்டரும் குளம், குட்டை,கண்மாய் போன்றவற்றிற்கு 300 மீட்தரும் இடைவெளி விடவேண்டும் ஏனென்றால் மேல்மட்டத்தில் இருக்கும் தண்ணீர் குவாரிக்குள் சென்றுவிடும் என்பதற்காகத்தான். எனவே இந்த குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. அது மட்டுமன்றி 500மீட்டர் சுற்றளவிக்குள் அரசால் போடப்பட்ட போர் வெல் , நீர்த்தேக்க தொட்டி இருக்கக் கூடாது. காரணம் வெடி வைக்கும் பொது அவைகள் பாதிக்கப் படும் என்பதற்காகத்தான் இந்த சட்டத்தை வைத்து இருக்கிறார்கள் . இந்த குவாரிக்கு இதெல்லாம் இல்லை என்பதை நாங்கள் தெரியப்படுத்துகிறோம். பசுமை அரண் 1500 மரங்கள் வேம்பு, ஆல், அத்தி, பூவரசு, புங்கன் போன்ற மரங்களை அமைப்பார்கள் என்கிறார்கள். இந்தப் பகுதியில் யாராவது ஒருவர் பசுமை அரண் அமைத்து உள்ளோம் என்று சொல்லுங்கள். குவாரி உரிமையாளர்கள் அரசாங்க சொத்தை எடுத்து பயன்படுத்துகிறார்கள். நிலம் அவர்கள் பேரிலிருந்தாலும் 3 அடிக்கு கீழ் இருப்பதெல்லாம் அரசாங்கத்திற்கு சொந்தம். அரசாங்க சொத்தை எடுத்து தொழில் செய்கிறார்கள், தொழில் செய்வது விதிகளின் படி செய்கிறார்களா? மரியாதைக்குரிய திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வினித் அவர்கள் கோடாங்கிபாளையம் ராமகிருஷ்ணன் கல் குவாரிக்கு பசுமை அரண் அமைக்கவில்லை என்பதற்காக தடைவிதித்தார். அது போன்ற நடவடிக்கையை கோவை மாவட்ட நிர்வாகமும் மேக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தொடங்கும்போது கம்பிவேலி போட்டுக் கொள்கிறேன் என்று சொல்கிறார்கள்

நடைமுறையில் அவ்வாறு இல்லை. எந்த குவாரியாக இருந்தாலும் இரண்டு மாதத்திற்குள் கம்பிவேலி போடவேண்டும் என்று திருமதி. சிவதாஸ் மீனா தலைமைச்செயலர் அவர்கள் கூறி உள்ளார்கள். இன்றுவரை அது நடைமுறைப்படுத்தாமல் இருப்பதால் மனிதர்கள் சாவு, விலங்குகள் சாவு ஏற்படுகிறது. இதன்மீது அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வெடி மருந்துகளை பொறுத்தவரை மிகக்குறைந்த குவாரிகள் நாணல் வெடி வெடிக்கிறார்கள். பல குவாரிகள் சட்ட விரோத வெடிகளைத்தான் வெடிக்கிறார்கள். உயர்நீதிமன்ற நீதிபதி கூட பூமித்தாயின் மார்பை பிளந்து ரத்தம் குடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். இப்படி குவாரிகள் எல்லாமே அதிகப்படியாக கனிமங்களை வெட்டி எடுப்பதற்கு அபராதம் போடப்படுகிறது. வரவேற்கின்றோம். வெளிநாடுகளிலிருந்து சட்ட விரோத வெடிமருந்து கொண்டு வருகிறார்கள். சட்ட விரோத வெடிமருந்துகள் நமது மாவட்டத்தில் பல ஆயிரம் டன் புழங்கி கொண்டிருக்கிறது. அதன் மீது மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சாலைகளை பொறுத்தவரை ஊராட்சி சாலையில் 10 டன் எடை வரைதான் கொண்டுசெல்ல வேண்டும் என்று விதிகள் இருக்கிறது. 1988 வாகன சட்டப்படி அபராதம் போடவேண்டும். 8 வருடம் வரவேண்டிய சாலை 2 வருடத்திலேயே காணாமல் போகிறது. அதை உடனடியாக செய்யவேண்டும். இதற்க்கு மாற்றாக தமிழகத்திலுள்ள இயற்கை வளங்கள் கொள்ளை போவதை தடுப்பதற்கு தமிழ்நாடு முதமைச்சர் வெளிநாடுகளிகலிலிருந்து மணல் இறக்குமதி செய்வதை பரிசீலித்துள்ளார்கள். சுற்றிலும் நில அதிர்வே ஏற்படுகிறது. எனவே இதனையெல்லாம் கருத்தில் கொள்ளவேண்டும். தமிழக கனிமங்கள் பல ஆயிரம் டன் அண்டை மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. யாராவது தொழிலாளிக்கு ESI , PF , இன்சூரன்ஸ் போட்டிருக்கிறோம் என்று சொல்ல சொல்லுங்கள். யாரும் கிடையாது. சர்க்கரை என்று எழுதி வைத்துக்

கொண்டால் இனிப்பு வராது. இந்தப் பகுதியை பொறுத்தவரை கேரளா அரசிடம் NOC வாங்கவேண்டும். எனவே மஹாலிங்கம் குவாரியை பொறுத்தவரை சிறு கனிம சலுகை விதிகள் அடிப்படையில் அரசு அனுமதி கொடுக்கக்கூடாது, விதி மீறல்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறி மஹாலிங்கம் குவாரிக்கு சட்ட ரீதியாக அனுமதி கொடுக்க தகுதி இல்லை. விதிகளை மீறி நடக்கும் இடத்தில் உங்கள் ஊர், உங்கள் மண் யாரோ சிலர் பிழைப்பதற்காக மொத்த தலைமுறையின் வாழ்க்கையும் வீணடிக்க வேண்டாம் என்று தாழ்மையோடு கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி.

17. **<u>திரு. சிலம்பரசன் திருமலையம்பாளையம் பேரூராட்சி</u>** :

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் சிலம்பரசன் திருமலையம்பாளையம் பேரூராட்சி எங்களுடைய பேரூராட்சிக்கு மிகப்பக்கத்தில் இருக்கிற சொக்கனூர் கிராமத்தில் மஹாலிங்கம் அவர்களுடைய கல்குவாரிக்கு அனுமதி அளிப்பது தொடர்பான கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அரசு அதிகாரிகள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்து கொள்கிறேன். கல்குவாரி சம்மந்தமாக பல்வேறு கருத்துக்களை சொன்னார்கள். அதுமட்டுமில்லாமல் இயற்கை காப்பாற்றப்படவேண்டும் என்று பல்வேறு கருத்துக்களை சொன்னார்கள். உண்மையாகவே மனிதர்களாகப் பிறந்த அனைவருமே இயற்கை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் உண்டு. இப்படி இருக்கும்போது மஹாலிங்கம் அவர்களுடைய கல்குவாரிக்கு அனுமதி தொடர்பான பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டது. அதில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற சில சம்பவங்களை சொன்னார்கள் அதேபோல இந்த பகுதியில் இருக்கிற மக்கள் கருத்துக்களை சிறப்பாக சொல்லி இருக்கிறார்கள். அந்த வகையில் சொக்கனூர் என்பது கிணத்துக்கடவிலிருந்து மேற்கு நோக்கி இருக்கிற இந்த பூலோக அமைப்பு என்று பார்த்தாலே முழுக்க முழுக்க பாறைகள் நிறைந்த ஒரு பகுதி.

இதில் பெரிய அளவில் விவசாயம் செய்ய முடியாது முழுக்க முழுக்க பாறைகள் நிறைந்த ஒரு பகுதி. இங்கு மக்களின் வாழ்வாதாரத்தையும் , கல்குவாரி தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய ஒரு நிலையும் இருக்கிறது. அதுமட்டுமல்ல அரசின் வருவாயும் ஒரு முக்கிய பங்கு இருக்கிறது. இத்தனை சூழல்களையும் அரசு விரிவாக பார்க்க வேண்டும். குவாரியை நேரில் பார்த்த பொது விதி மீறல்கள் எதுவும் இல்லை. கிணத்துகடவிற்கு கிழக்கு பக்கத்திலிருக்கும் சில குவாரிகளில் சில விதிமீறல்கள் இருக்கிறது. அதற்க்கு முறையான அபாரதங்களும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கல்குவாரிக்கு அனுமதி தருவது என்பது சாதாரண விஷயம் அல்ல, மஹாலிங்கம் அவர்களுடைய நலன் மட்டுமல்ல எல்லா தரப்பு தொழிலாளர்களின் வாழ்வுரிமை இங்கு பாதுகாக்கப் பட வேண்டும் . இங்குள்ள கிரஷர்க்காரர்கள், லாரி டிரைவர், கூலி தொழிலாளர்கள், கூலிக்கு வேலைக்கு போகிறவர்கள் அனைவரின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப் படவேண்டும். அடுத்ததாக விவசாயம் பாதிக்கப்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது. இந்தப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்படுகிறதா என்றால் இல்லை. எனவே அங்கு எப்படி வருவாய் ஈட்ட முடியும், அங்குள்ள தொழிலார்களின் உரிமை எப்படி பாதுகாக்க வேண்டும் என்று பார்க்க வேண்டுமே தவிர பெரிய ஆட்சேபணையும் இல்லை. மேலும் சுற்றிலும் உள்ள தோட்டத்து சாலைகள் ஆடு மாடு கட்டும் இடம்தான். மக்கள் குடியிருப்பு இல்லை. பாறையில் அங்குள்ள மக்கள் என்ன வாழ்வாதாரத்தை பெருக்க முடியும்? ஆவணங்களின் அடிப்படையில் பேசக் கூடாது, அதிகாரிகள் அங்கு நேரில் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அங்கு நீர் நிலையோ, ஓடையோ, வண்டிப்பாதை எதுவுமே இல்லை. சுற்றிலும் உள்ள லாரி உரிமையாளர்கள், ஓட்டுனர்கள் எல்லோருமே இதை நம்பி உள்ளார்கள். அதுமட்டுமே அவர்களின் தொழில், வாழ்வாதாரமே அதுதான். எனவே, எல்லா துறை அனுமதி பெற்ற பிறகே குவாரி தொழில்

49

செய்கிறார்கள். மேலும் மஹாலிங்கம் அவர்கள் இப்பகுதியில் உள்ள பள்ளி குழந்தைகளுக்கு, கூலி தொழிலாளர்களுக்கு மிக உதவிகரமாக அவர்தான் இருக்கிறார். பக்கத்தில் அவர் குவாரி வரும்போது நாங்கள் குறைவான விலையில் பொருட்களை வாங்கமுடியும். இங்கு பெரிய வசதி வாய்ப்புகளோடு யாரும் இல்லை. மஹாலிங்கம் அவர்கள் ஏழை மக்களுக்கு மிகவும் உதவிசெய்துகொண்டு இருக்கிறார்கள். எனவே எங்கெங்கோ நடக்கும் செய்திகளை மையமாக வைத்து இந்த குவாரிக்கு அனுமதி மறுக்கக் கூடாது. இந்த கல் குவாரிக்கு அனுமதி தாராளமாக வழங்கலாம். இங்கு வந்துள்ள எல்லா தரப்பு மக்களின் வாழ்வாதாரம், அரசின் வருமானம் மென்மேலும் உயரவேண்டும். மேலும் இங்கு அரசின் கண்காணிப்பிற்கு உட்பட்டு, அறிவுறுத்தலுக்கு உட்பட்டு வெடிமருந்துகள் தருகிறார்கள். அரசின் விதிகளுக்கு உட்பட்டு இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் அதில் எந்த ஆட்சேபணையும் இல்லை. அரசியல் சாசனம் விதி 21 ன் அடிப்படையிலும் அரசியல் சாசனம் விதி 19 ன் அடிப்படையிலும் இங்குள்ள தொழிலாளர்களினுடைய நலனை பாதுகாக்க வேண்டியது எல்லோரின் கடமை, இயற்கையை பாதுகாக்க வேண்டும் . இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்</u>:

இங்கு கருத்துக்களை பதிவு செய்த அனைத்து பொதுமக்களுக்கும் எங்களது நன்றி. மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல் ஆகியவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படும்.

கூட்ட முடிவில் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்கள் இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி கொடுத்த தனி மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்த பொது மக்கள் அனைவருக்கும் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கூட்டத்தை இனிதே முடிக்கப்படுகிறது. நன்றி வணக்கம். எனஅனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**மனுக்களின் எண்ணிக்கை : 8**

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**கோயம்புத்தூர் தெற்கு.**

**தனி மாவட்ட வருவாய் அலுவலர்**
**நெடுஞ்சாலைகள்,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**